# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2014 - 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்:.................................................................... நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. அழகுக் கலைகளில் செவிவழியாக வந்து உள்ளத்தைக் களிப்பூட்டும் கலை

அ) நடனம் ஆ) இசை

இ) ஓவியம் ஈ) சிற்பம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. 34 ஆண்டுகள் தனது வலிமையான ஆட்சியை நடத்தி வந்த மன்னன்

அ) எல்லாளன் ஆ) சங்கிலியன்

இ) பண்டாரவன்னியன் ஈ) கயிலைவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. மூதுரை என்னும் நூலை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) திருவள்ளுவர்

இ) ஔவையார் ஈ) மோசிகீரனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி

அ) தடதட ஆ) மெல்லமெல்ல

இ) சின்னஞ்சிறிய ஈ) மேலேமேலே

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தன்னைத்தான் காக்க விரும்புபவன் காத்துக் கொள்ள வேண்டியது

அ) இன்பத்தை ஆ) நட்பை

இ) சினத்தை ஈ) பணத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகர்

அ) கந்தரோடை ஆ) மன்னார் இ) வன்னி ஈ) அநுராதபுரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. வண்டுகள் மலர்களிலிருந்து தேன் குடித்தன. இச்சொல்லியம்

அ) கூற்றுச் சொல்லியம் ஆ) வினாச் சொல்லியம்
இ) ஏவற் சொல்லியம் ஈ) மெய்ப்பாட்டுச் சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. உயர்திணைக்குரிய பால்

அ) மூன்று ஆ) நான்கு இ) இரண்டு ஈ) ஐந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இராவணனைக் காட்டிக் கொடுத்த இரண்டகன்

அ) வன்னியத்தேவன் ஆ) எட்டப்பன்
இ) விபீடணன் ஈ) கதிர்காமநாயகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. 'வறுமையிலும் செம்மையாக இரு' என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.

ஆ) இரக்கப்போனாலும் சிறக்கப்போ.

இ) அக்கரைமாட்டுக்கு இக்கரை பச்சை.

ஈ) நிறை குடம் தளம்பாது.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. மேதி என்றால்

அ) பெண் எருமை ஆ) சேறு இ) வயல் ஈ) தாமரைப்பூ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. அயர்வுடனே மன்னன் உறங்குவது கேள்வியுற்று அவனைக்காண அரண்மனையில் காத்திருந்தவர்

அ) ஔவையார் ஆ) மோசிகீரனார்
இ) பாவேந்தர் ஈ) கபிலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. **குறள் :-** பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்

______________ கடலிற் பெரிது

அ) நன்மை ஆ) தீமை

இ) பகைமை ஈ) இனிமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. நடந்த என்பது

அ) எழுவாய் ஆ) வினையெச்சம்

இ) வினைமுற்று ஈ) பெயரெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. போர்த்துக்கேயர் பெங்கூற்றர் என்னும் கோட்டையைக் கட்டிய இடம்

அ) ஆனையிறவு ஆ) வெற்றிலைக்கேணி

இ) மன்னார் ஈ) பூநகரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. அஃறிணைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மாறன் ஆ) நீங்கள்

இ) ஓட்டுநர் ஈ) மரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. ______________ ச் சென்ற இடமெல்லாம் சிறப்பு .

அ) மன்னனுக்கு ஆ) வீரனுக்கு

இ) கற்றோனுக்கு ஈ) செல்வந்தனுக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. உலகப் பொதுமறையை எழுதிய புலவர்

அ) திருவள்ளுவர் ஆ) மோசிகீரனார்

இ) சின்னத்தம்பிப்புலவர் ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. மின்னிமின்னி என்பது

அ) இரட்டைக்கிளவி ஆ) இணைமொழி

இ) அடுக்குத்தொடர் ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. **பழமொழி** :- ஒன்று பட்டால் உண்டு ________________.

அ) வால்வு ஆ) வாள்வு இ) வாழ்வ்வு ஈ) வாழ்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. வந்தேன் என்ற சொல்லின் வினையடி

அ) வந்து ஆ) வந்த இ) வா ஈ) வரு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. ஒழுக்கமில்லாதவனிடம் எது இருக்காது என வள்ளுவர் கூறுகின்றார்?

அ) உயர்வு ஆ) தாழ்வு

இ) இகழ்வு ஈ) மகிழ்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. செல்லிடம் என்பதைப் பிரித்தால்

அ) செல்லி + டம் ஆ) செல் +இடம்

இ) செல் + லிடம் ஈ) செல்லு + இடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. வினையெச்சத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) கற்று ஆ) பாடிய இ) தோற்றினாள் ஈ) அழுத

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. வேரில் பழுக்கும் பழம்

அ) மாம்பழம் ஆ) பலாப்பழம்

இ) விளாம்பழம் ஈ) வாழைப்பழம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தங்கை சிவப்புச் சட்டை அணிந்திருந்தாள்.

இதில் வந்துள்ள அடைமொழி

அ) தங்கை ஆ) சட்டை இ) சிவப்பு ஈ) இருந்தாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. யாழ்ப்பாண அரசு வலிமை பெற்றிருந்த நூற்றாண்டு

அ) 13 ஆ)16 இ) 19 ஈ) 14

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பின்வரும் எழுத்துகளில் வல்லின மெய்யெழுத்து

அ) ர் ஆ) ழ் இ) ட் ஈ) ம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. துளைக்கருவிகளுள் ஒன்று

அ) மேளம் ஆ) புல்லாங்குழல்

இ) வீணை ஈ) தண்ணுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. யானைகள் என்பது

அ) ஆண்பால் ஆ) ஒன்றன்பால்

இ) பெண்பால் ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. வயலுக்கு வேலியாக இருப்பவை எவை?

2. இலங்கையின் பழங்குடிகள் தமிழர் என்பதற்கான சான்றுகள் இரண்டு தருக?

3. ஆறுவது சினம் எனக் கூறியவர் யார்?

4. அன்னப்புள்ளின் கற்சிலை எங்கே உள்ளது?

5. யாருக்கு அஞ்சிப் போர்த்துக்கேயர் கோட்டைகளைக் கட்டினர்?

6. சினங்காத்தல் பற்றிக் கூறும் திருக்குறளின் அதிகாரம் எது?

7. நல்லவருக்குச் செய்த உதவி எதைப்போல இருக்கும் என்று மூதுரையில் ஔவையார் கூறுகின்றார் ?

புள்ளிகள் 10

3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

இயற்கையின் படைப்புகள் எல்லாமே அழகுதான். அவை மனதிற்கும் ஐம்புலன்களுக்கும் இன்பம் தருபவை. அத்தகைய இயற்கையின் படைப்புகளுள் மிகமிக விந்தையானவை மலர்கள். மலர்களின் வண்ணவண்ண நிறங்களாலும் இனிய கமழ்வினாலும் கவரப்படாத மக்களே இல்லை. உயர்ந்தோரை வரவேற்கும் போது மலர்மாலை அணிவித்து மகிழ்கின்றோம். இறந்தோரை அடக்கம் செய்யும் போது மலர்களால் அழகூட்டிப் போற்றுகின்றோம். இதே போல் மக்கள் வாழ்வின் எல்லா இடங்களிலும் மலர் சிறப்பிடம் பெறுகிறது. எமது தாயகத்தில் தாமரை, அல்லி, குவளை போன்ற நீர் மலர்களும் மல்லிகை, முல்லை, நந்தியாவட்டை, செவ்வரத்தை போன்ற நிலமலர்களும் எல்லாப் பருவ காலங்களிலும் மலர்கின்றன. எம் மண்ணின் மலர்களில் காந்தள் மலரும் ஒன்று. காந்தள் இன்று கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. கார்த்திகைத் திங்களில் பூப்பதால் காந்தள் இப்பெயரைப் பெற்றது.இம்மலர் தெற்காசியா எங்கும் மலர்ந்தாலும் தமிழீழ மக்களால் போற்றப்படும் மலராகச் சிறப்புப் பெற்றுள்ளது. கார்த்திகைப்பூ தமிழீழத் திருநாட்டின் தேசிய மலர்.

1. ஐம்புலன்களுக்கும் இன்பம் தருபவை எவை?

_______________________________________________

_______________________________________________

2. இயற்கையின் படைப்புகளில் விந்தையானவை எவை எனக் கூறப்படுகிறது?

_______________________________________________

_______________________________________________

3. நீர் மலர்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

_______________________________________________

4. கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படும் பூ எது?

_______________________________________________

_______________________________________________

5. கார்த்திகைப்பூ எந்நாட்டின் தேசிய மலராகும்?

_______________________________________________

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

**ஈகம்**

| | | | | |
|---|---|---|---|---|
| செய்யும் | உதவி | எரிவதால் | ஒளி | மாறுமே |

மெழுகுவர்த்தி ____________________ தான்

விளக்கின் ____________________ தோன்றுமே

மெழுகுவர்த்தி மறையும்போது

வெளிச்சமாக ____________________

ஈகம் ____________________ பண்பினால்தான்

நாளும் அன்பு பெருகுமே

ஈகம் என்றால் நம்மை மறந்து

பிறருக்கு ____________________செய்வதே

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

வினாச்சொல்லியம்:- ______________________

______________________

ஏவற்சொல்லியம்:- ______________________

______________________

2. பின்வரும் வினையடிகளைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.

| வினை அடி | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| கூறு | | |
| ஆடு | | |
| சிரி | | |

3. எழுவாய் அடைமொழி, செயப்படுபொருள் அடைமொழி, பயனிலை அடைமொழி என்பன இடம் பெறுமாறு சொல்லியம் ஒன்று தருக.

______________________

______________________

4. சொற்றொடர்கள் இரண்டும் சொல்லியம் ஒன்றும் எழுதுக.

______________________

______________________

______________________

5. தரப்பட்டுள்ள சொற்களை வைத்துச் சொல்லிங்கள் எழுதுக.

அரம் :- ______________________

______________________

அறம் :- ______________________

______________________

புள்ளிகள் 15

6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

பனிகாலத்தில் குளிர் அதிகமாக இருக்கும். மக்கள் வெளியில் செல்லும் போது பனிகால ஆடைகளை அணிவர். பனிகாலத்தில் பகற் பொழுது குறைவாக இருக்கும். இராப் பொழுது நீண்டதாக இருக்கும். பனிகாலம் சிறுவர்களுக்கு மிகவும் பிடித்த காலம். அவர்கள் பூம்பனியில் உருண்டைகள் செய்து எறிந்து விளையாடுவர். சிறுவர்களும் பெரியவர்களும் பனியில் சறுக்கி மகிழ்வார்கள்.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ மருதுபாண்டியன்

★ கயிலைவன்னியன்

★ தமிழ்ப்பள்ளி ஆண்டு விழா

புள்ளிகள் 20